# இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முறைப்பாடு தொடர்பான ஒழுங்கு விதிகளும் வழிகாட்டல்களும்

**1.** இலங்கையில் வெளியாகும் பத்திரிகையொன்றில் அல்லது சஞ்சிகையில் வெளியாகிய செய்தி/கட்டுரை புகைப்படம் அல்லது வேறும் வடிவமைப்பு மூலம் அல்லது இணைய பிரசுரம் ஒன்றின் ஊடாக நபரொருவருக்கு அல்லது வேரொருவருக்கு பாதிப்பு, களங்கம் அல்லது அநீதி ஏற்பட்டிருப்பதாக நம்ப அல்லது நியாயமான ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியுமாயின் அதுபற்றி பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு (இ.ப.மு.ஆ.கு) முறைப்பாடு செய்ய முடியும். முறைப்பாடுகள் பின்வரும் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

(அ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம். விண்ணப்பப்படிவத்தை இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் www.pccsl.lk என்ற இணையத்தளத்தில் இருந்து பதிவிரக்கம் செய்து கொள்ள முடியும்

(ஆ) முறைப்பாடு தொடர்பாக முறைப்பாடு செய்பவரின் கையொப்பத்துடனான எழுத்து மூலமான விளக்கம் அல்லது தெளிவுபடுத்தல்

(இ) முறைப்பாட்டை தனிப்பட்ட முறையில், பதிவுத்தபால், மின்னஞ்சல், தொலைநகல், தொலைபேசி அல்லது வேறும் தொடர்பு கொள்ளக்கூடிய வழிமுறை மூலம், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) முறைப்பாட்டுக்கா சமர்ப்பிக்கப்படும் விடயம் பிரசுரிக்கப்பட்டதாக அல்லது ஏதாவது இணைய அல்லது வேறும் வழிமுறைகளில் இருந்து பிரதி எடுக்கப்பட்டோ, பதிவிரக்கம் செய்தோ அல்லது வேறும் இணைப்புக்களில் இருந்து பெறப்பட்டதாகவோ எவ்வாறாயினும் முறைப்பாட்டுன் சம்பந்தப்பட்டதாக இருப்பின் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படலாம்.

(உ) முறைப்பாட்டாளருக்கு பாதிப்பை அல்லது களங்கம் உண்டுபண்ணியதாக கருதும் பிரசுரத்தின் பிரதியையும் இணைத்து அனுப்ப வேண்டும். மின்னஞசல் அல்லது வேறும் இலத்திரனியல் வழிகளின் ஊடாக முறைப்பாடு செய்வதாயின் பாதிப்புக்கு காரணமான பிரசுரத்தின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும்.

(ஊ) பாதிப்பை ஏற்படுத்திய பிரசுரத்தின் பிரதியை முறைப்பாட்டாளரல் சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணக்குழு முறைப்பாட்டாளருக்கு உதவி செய்வதற்குறிய எல்லா முயற்சிகளையும் மெற்கொள்ளும்

2 . (அ)முறைப்பாட்டாளர் இ.ப.மு.ஆ.கு. விடம் :

(1) சமாதானப்படுத்தல் தீர்வு மூலமாக
(2) நல்லிணக்க தீர்வு மூலமாக
(3) மத்தியஸ்த தீர்வு மூலமாக முறைப்பாட்டுக்கு தீர்வை கானுமாறு கோரலாம்

முறைப்பாட்டுக்குரிய தீர்வாக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பிரகாரம் (ஆணைக்குழுவின் வேண்டுகொளுக்கமைவாக என்று குறிப்பிட்டு ) பிரிவு (7) இற்கமைய குறிப்பிட்ட பத்திரிகையின், சஞ்சிகையின், அல்லது இணைய மின் பத்திரிகையின் ஆசிரியரால் திருத்தம்/பதிலளிப்பதற்கான சந்தர்ப்பம்/மன்னிப்புக் கோரல் பிரசுரிக்கப்படுமாயின் அந்த முறைப்பாடு மத்தியஸ்த தீர்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) எவ்வாறாயினும் முறைப்பாட்டாளர் அந்த முறைப்பாட்டை மத்தியஸ்த தீர்வுக் குழுவின் நடுவத் தீர்ப்பிற்காக சமர்ப்பிக்குமாறு கோரினால் முறைப்பாடானது பிரிவு (1) இற்கமைய பின்வரும் தேவைப் பாட்டை நிறைவு செய்ய வேண்டும்.

(1) விடயம் மற்றும் முரண்பாட்டின் தன்மை என்பன முன்வைக்கப்பட வேண்டும்.
(2) சாட்சியத்தின் அறிக்கையொன்று முன்வைக்கப்பட வேண்டியிருப்பதோடு
(3) முறைப்பாட்டாளரால் கோரப்படும் நிவாரணமும் தெரிவிக்கப்பட வேண்டும்.

3 முறைப்பாட்டுக்குரிய பிரசுரம் பிரசுரமான திகதியில் இருந்து ஒரு வருடத்தைக் கடந்திருப்பின் இ.ப.மு.ஆ.கு. அந்த பிரசுரம் தொடர்பான முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ள மாட்டாது.

## B. முரண்பாட்டுத் தீர்வுக்குழுவின் செயற்பாடு

**4.** இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தால் முன்வைக்கப்பட்டு இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் கண்காணிக்கப்படுகின்ற பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக் கோவை மீறப்பட்டதாக முறையாகச் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டை மட்டுமே இந்த முரண்பாட்டுத் தீர்வுக் குழு ஏற்றுக்கொள்ளும்.

5. குறிப்பிட்ட முறைப்பாட்டுக்குரிய பிரசுரம் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக்கோவையை மீறும் வகையில் இல்லாவிட்டால், தீர்வுக் குழுவானது அந்த முறைப்பாட்டை நிராகரிக்கும், என்பதோடு
முறைப்பாட்டாளருக்கு, முறைப்பாடு கிடைக்கப்பெற்ற திகதியில் இருந்து இரண்டு வாரத்திற்குள் இது தொடர்பாக ஆணைக்குழு எழுத்து மூலம் அறிவிக்கும். அதேநேரம் அத்தகைய அறிவித்தல் ஒன்று முறைப்பாட்டாளருக்கு அனுப்பப்படாவிட்டால் அந்த முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று பொருள்படும். அத்துடன் கிடைக்கப் பெற்ற திகதியில் இருந்து அந்த முறைப்பாடு விசாரணைக் குட்படுத்தப்படுகின்றது என்று கருத முடியும்.

6. ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பாக தீர்வுக் குழு ஒரு வேலை நாளுக்குள் முறைப்பாட்டுக்குரிய பிரசுரத்தை வெளியிட்ட பத்திரிகை, சஞ்சிகை அல்லது இணையத்தள ஆசிரியருடன் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தீர்வுக்குழு தொடர்பு கொண்டு குறிப்பிட்ட முறைப்பாட்டாளருக்கு எற்பட்டுள்ள பாதிப்பு தொடபாக அறிவிப்பதோடு அதன் பிரதியை முறைப்பாட்டாளருக்கும் அனுப்பி வைக்கும். முறைப்பாடு கிடைக்கப்பெற்று ஐந்து (5) வேலை நாட்களுக்குள் இவ்வாறு தொடர்பை ஏற்படுத்தி முறைப்பாட்டாளரால் கோரும் திருத்தம்/பதிலளிப்பதற்கான சந்தர்ப்பத்தை கோரும் என்பதோடு அவ்வாறில்லாத விடத்து ஆசிரியரின் நிலைப்பாட்டை எழுத்து மூலம் அறிவிக்குமாறும் கோரும்.

7. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் குறித்த பத்திரிகை அல்லது சஞ்சிகை அல்லது வெளியீட்டின் ஆசிரியர் பி.நி.அ.க்கு பதில் ஒன்றை அனுப்பத் தவறிவிட்டால் அதன் பெறுபேறாக அமைவது குறித்த முறைப்பாடு இ.ப.மு.ஆ.கு. வின் விசாரணைக் குழுவின் விசாரணைக்காக சமர்ப்பிப்பதாக அமையும். எவ்வாறாயினும் ஆசிரியரால் அல்லது அவருக்கு பதிலாக கருமமாற்றக்கூடிய ஒருவரால் மேலும் கால அவகாசம் கோரி நியாயமான வேண்டுகோள் ஒன்றை விடுத்தால் அதனை பரிசீலனை செய்து மேலதிக காலத்தை வழங்க தீர்வுக் குழு கவனம் செலுத்த வேண்டும்.

வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் பத்திரிகை அல்லது சஞ்சிகை அல்லது இணைத்தளத்தின் ஆசிரியரால் பதிலளிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டால் அல்லது முறைப்பாட்டாளரின் விளக்கம் அல்லது பதில் பிரசுரிக்கப்பட்டால் அது பத்திரிகையின் பதிலாக கருதப்படும்.

8. முரண்பாட்டுத் தீர்வக்குழுவானது தரப்பினரிடையில் மிகவும் குறுகிய காலப்பகுதிக்குள் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் வகையில் குறிப்பாக முறைப்பாடு கிடைக்கப்பெற்று இரண்டு வாரங்களுக்கு (2) மேற்படாத காலப்பகுதிக்குள் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

## C. சமாதானப்படுத்தல்

9. முறைப்பாட்டாளர் குறிப்பிட்ட முறைப்பாட்டை நல்லிணக்க அடிப்படையில் தீர்த்துக் கொள்ள விரும்புவதாக இ.ப.மு.ஆ.கு. வுக்கு தெரிவிப்பாரானால் தீர்வுக்குழு அதுபற்றி பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு அறிவிக்கும். சமாதானப்படுத்தல் தீர்வானது
திருத்தம் அல்லது தெளிவு படுத்தல் அல்லது மன்னிப்புக் கோரலை பிரசுரிக்கக் கோருதல் என்ற அடிப்படையில் அமையும்

10. சமாதானப்படுத்தல் செயற்பாட்டின் போது பிரதம நிறைவேற்று அதிகாரியின் நடு நிலைமை தொடாட்பாக கேள்வி எழுப்பப்படுமானால் அதுபற்றி பிரதம நிறைவேற்று அதிகாரியடம் தெரிவிக்கப்பட்டால் அவர் அதனை எழுத்து மூலமாக தீர்வுக்குழுவுக்கு தெரியப்படுதினால் தீர்வுக்குழு அந்த வேண்டுகோளுக்கு ஏற்ப குழுவின் உறுப்பினர் ஒருவரை விசாரணைக்காக நியமிக்கும் உரிமையைப் பெற்றிருக்கின்றது.

11. முறைப்பாடொன்று தொடர்பாக கோரப்பட்ட தீர்வான சமாதானப்படுத்தலின் அடிப்படையில் அந்த முறைப்பாட்டுக்குறிய தீர்வு இல்லாது வேறு வகையான தீர்வு அமைய வெண்டும் என்று தீர்வுக்குழு கருதினால் அது பற்றி முறைப்பாட்டுக்குறிய தரப்பினருக்கு அறிவிக்க முடியும்.

## D. நல்லிணக்கம்

12. ஒரு முறைப்பாடு தொடர்பாக முறைப்பாட்டாளர் அந்த முறைப்பாடு நல்லிணக்க தீர்வின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தால் முரண்பாட்டுத் தீர்வுக்குழு அவ்விடயத்தை பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு தெரிவிக்கும் அல்லது மூவர் கொண்ட மத்தியஸ்த தீர்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கும்.

13. (அ) ஏதாவத சந்தர்ப்பம் ஒன்றில் மத்தியஸ்தத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவர் குறித்து அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி குறித்தோ ஏதாவது நியாயமான சந்தேகங்கள் அல்லது தரப்பினருக்கு அதிப்தி இருப்பதாக தெரிவிக்கப்பட்டால் அல்லது தீர்வுக் குழு எழுத்து மூலமான வேண்டுகொள் ஒன்றை விடுத்தால் அத்தகையவரை மத்தியஸ்த தீர்வுக் குழுவின் பிரதிநிதியாக நிறுத்தவதை தவிர்க்க வேண்டும்.

(ஆ) அந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு பதிலாக பிரதம நிறைவேற்று அதிகாரி அல்லது தீர்வுக் குழு அந்த இடத்திற்கு தீர்வுக்குழுவில் இருந்து பொறுத்தமான ஒருவரை நியமிக்கும்.

14. குறித்த முறைப்பாடு கோரப்பட்ட தீர்வான மத்தியஸ் அடிப்படையில் அல்லாது வேறு வகையான தீர்வு அமைய வேண்டும் என்று தீர்வுக்குழு கருதுவதாயின் வேரொரு வகையான தீர்வு வழி முறை பற்றி முறைப்பாட்டுக்குரிய தரப்பினருக்கு தெறிவிக்க முடியும்.

15. முரண்பாட்டுத் தீர்வுக்குழு குறிப்பிட்ட முறைப்பாட்டை மத்தியஸ்த தீர்வு வழியில் தீர்ப்பதாக கருதினால் முறைப்பாட்டாளருக்கு பணச் செலவோ அல்லது வேறும் இழப்போ எற்படாத விதமாக அதற்கான எற்பாட்டை மேற்கொள்ள வேண்டும். பொதுவாக :

(அ) இயற்கை நீதி கோட்பாட்டிற்கமைய விசாரணையின் போது ஒவ்வொரு தரப்பினருக்கும் அவர்களது கருத்துக்களை தெரிவிப்பதற்கு போதுமான சந்தர்ப்பம் வழங்கப்படுவதோடு நியாயமான அடிப்படையில் அதற்கு செவிமடுக்கவும் வேண்டும்.

(ஆ) பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு அல்லது முரண்பாட்டைத் தீர்ப்பதற்காக (பொறுத்தமான அடிப்படையில்) நியமிக்கப்பட்டுள்ள 3 போர் கொண்ட குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நாளில் இருந்து இரண்டு (2) வார காலப்பகுதிககுகள் முரண்பாடு தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதோடு தேவைப்படும்பட்சத்தில் தரப்பினரின் அனுமதியுடன் காலத்தை நீடித்துக் கொள்ள முடியும்.

16. நல்லிணக்க தீர்வு செயற்பாடானது பின்வரும் அடிப்படையில் முன்னெடுக்கப்படலாம் :

(அ) தரப்பினர் உடன்பாடொன்றுக்கு வரும் அடிப்படையில்

(ஆ) மூவர் கொண்ட தீர்வுக் குழுவால் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரியின் சிபாரிசின் அடிப்படையில்

முரனண்பாட்டுக்கான தீர்வு முயற்சி முடிவுக்கு கொண்டு வரப்படுவதாக அறிவித்தல் ஒன்று விடப்படுமாயின் அல்லது :

(இ) தரப்பினரில் யாராவது ஒரு தரப்பினர் மத்தியஸ்த தீர்வு செயற்பாட்டை அமுல்படுத்துவது தொடர்பாக எழுத்து

மூலமாக வேண்டுகோள் விடுத்தால்

இந்த சந்தர்ப்பத்தில் மத்தியஸ்த தீர்வானது மேலே உள்ள பிரிவு (அ) மற்றும் (ஆ) ஆவின் அடிப்படையில் வழங்கப்பட்டதாயின் தீர்வுக் குழு அந்த தீர்ப்பு கீழே காணப்படுகின்ற பிரிவு மத்தியஸ்த தீர்வுக்காக சமாப்பிக்கும்.
எவ்வாறாயினும் நல்லிணக்க தீர்வு செயற்பாட்டில் கலந்து கொண்ட உறுப்பினரை மத்தியஸ்த தீர்வுக்கு நியமிக்கக் கூடாது.

எவ்வாறாயினும் மத்தியஸ்த தீர்வுக்கு முறைப்பாட்டாளர் விரும்பாதவிடத்து அந்த முறைப்பாட்டை வாபஸ் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

## E. மத்தியஸ்த தீர்வு

17. ஏதாவது பிரசுரம் ஒன்று தொடர்பில் முறைப்பாடாளருக்கும் இ.ப.மு.ஆ.கு. வின் அங்கத்தவருக்கும் இடையிலான முரண்பாட்டை மத்தியஸ்த வழியில் தீர்த்து வைக்குமாறு இ.ப.மு.ஆ.கு. வை முறைப்பாட்டாளர் கோரினால் அல்லது மேலே சொல்லப்பட்ட பிரிவுகளான 11 அல்லது 16 இன் அடிப்படையில் அல்லது அவற்றுடன் பிரிவு 12 இன் அடிபப்டையிலும் இ.ப.மு.ஆ.கு. ஒரு உடன்படிக்கைக்கு வரமுடியும். 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க முரண்பாட்டுத் தீர்வுச் சட்டத்தின் பிரகாரம் முறைப்பாட்டாளருக்கும் இ.ப.மு.ஆ.கு. வுக்கும் இடையில் ஏற்படும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஒரு தீர்வுக்கு வரமுடியும்.

18. எவ்வாறாயினும் முறைப்பாட்டாளர் மத்தியஸ்த தீர்வின் அடிப்படையில் முறைப்பாட்டைத் தீர்த்து வைக்குமாறு இ.ப.மு.ஆ.கு. வுக்கு வேண்டுகொள் விடுத்தால் அல்லது தீர்வுக்குழு பிரிவு 11 அல்லது 16 இன் அடிப்படையில் மத்தியஸ்த தீர்வுக்காக முறைப்பாட்டை சமர்ப்பிப்பதாயின் முரண்பாட்டுத் தீர்வுக் குழுவில் இருந்து மூன்று உறுபபினர்களை உள்ளடக்கிய குழுவொன்றை குறிப்பிட்ட முறைப்பாட்டை மத்தியஸ்த அடிப்படையில் தீாத்துவைப்பதற்காக நியமிக்க வேண்டும்.

19. இவ்வாறு நிமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் அல்லது உறுப்பினர்கள் குறித்து முறைப்பாட்டாளர் அதிருப்தி தெரிவிப்பாராயின்
அந்த சந்தர்ப்பத்தில் தீர்வுக்குழு வேறு உறுப்பினரை அல்லது உறுப்பினர்களை நியமிக்க வேண்டும்.

20 (அ) மூவர் கொண்ட மத்தியஸ் தீர்வுக்கான உறுப்பினர்கள் முறைப்பாட்டை விசாரணை செய்து மத்தியஸ்த வழியில் தீர்த்து வைப்பதற்கான அமரும்போது

(i) மத்தியஸ்த தீர்வுக்காக கூடும் போது அதற்கான கோரம் இரண்டு (2) உறுப்பினர்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

(ii) மத்தியஸ்த தீர்வொன்றுக்காக அமரும் தீர்வுக் குழு எப்போதும் ஊடகத்துறை சாராத சிவில் தரப்பு அங்கத்தவர்களின் பெரும்பான்மையை பேனுவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதோடு

(iii) குறிப்பிட்ட முரண்பாடு தொடர்பாகமுடி வெடுக்கும் மூவர் கொண்ட தீர்வுக்குழுவில் பெரும்பான்மையான இரண்டு (2) உறுப்பினர்களது முடிவு தீர்ப்புக்குறிய முடிவாக கருத முடியும்.

(ஆ) மூவர் கொண்ட (3) தீர்வுக்குழு தரப்பினருடனான இணக்கம் மற்றும் எந்தவொரு விடயத்தையும் குழுவுடன் கலந்துரையாடும். அத்துடன் மத்தியஸ்த தீர்வொன்றை எட்டுவதற்கான கோரம் இரண்டு (2) உறுப்பினருக்கு குறையாமலிருக்க வேண்டும் என்பதோகும்.

21. மத்தியஸ்த தீர்வுக்காக ஒரு முறைப்பாடு முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த மத்தியஸ்தத்தில் ஈடுபட்ட முரண்பாட்டுத் தீர்வுக்குழுவின் ஒரு உறுப்பினரின் நடவடிக்கையில் நியாயமான காரணத்தின் அடிப்படையில் சந்தேகம் அல்லது அவரின் பக்க சார்புத்தன்மை அல்லது சுயாதீனம் இன்மை தொடர்பாக சந்தேகம் எழுப்பப்பட்டால் அத்தகையவரை குறிப்பிட்ட விசாரணைக்கு மத்தியஸ்தம் வகிக்கும் உருப்பினராக நியமிக்கக் கூடாது.

மத்தியஸ்த தீர்வு நடவடிக்கைக்கு நியமிக்கப்பட்ட ஒருவரின் நடத்தை தொடர்பாக (அ) வில் சொல்லப்பட்ட அடிப்படையில் எழுப்பப்பட்ட சந்தேகம் நிரூபிக்கப்பட்டால் அவரின் இடத்திற்காக வேரொருவரை நியமிப்பதற்கு தீர்வுக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**22.** மத்தியஸ்தத்தை முறைப்பாட்டாளருக்கு சிரமம் இன்றியும் பொருளாதார இழப்பு எற்படாத விதாகவும் மேற்கொள்ள வேண்டும் என்று முரண்பாட்டுத் தீர்வுக்குழு கருதுமானானல் : பொதுவாக

(அ) இயற்கையான நீதித் தத்துவத்தின் அடிப்படையில் ஒவ்வொரு தரப்பினருக்கும் முறைப்பாட்டோடு சம்பந்தப்பட்ட விடயம் தொடாடபான கருத்தை முன்வைப்பதற்கு போதிய சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

(ஆ) மத்தியஸ்த தீர்ப்பின் போது மத்தியஸ்த அதிகாரி கோருவாரானால் அல்லது தரப்பினர் முரண்பாட்டோடு சம்பந்தப்பட்ட விடயத்தை நிருபிப்பதற்கு போதுமான ஆதாரங்களையும் முன்வைக்க வேண்டும்.

(இ) ஏதாவதொரு விடயம் தொடர்பாக அதனை நிரூபிப்பதற்கு முன்வைக்கப்படும் சாட்சியங்கள் பொருத்தமற்றவை அல்லது சம்பந்தம் இல்லாதவை என்று மத்தியஸ்த விசாரணைக்குழுவினர் கருதுமிடத்து அவற்றை நிராகரிக்க முடியும். எவ்வாறாயினும் பத்திரிகையின் ஆசிரியர் அல்லது வெளியீட்டாளர் குறிப்பிட்ட விடயம் குறித்து திருப்தியடைய தவறுமிடத்து அத்தகைய அதிருப்தி நிலை முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளைத் தெடர்வதற்கு இடையூறாக அமையாது.

(ஈ) முரண்பாடு தொடர்பாக தரப்பினரால் முன்வைக்கப்படுகின்ற சகல விடயங்களும் அல்லது சமர்ப்பணங்களும் இ.ப.மு.ஆ.கு. வின் ஒழுங்குவிதிகளுக்கமைவாக இருக்க வேண்டும். தரப்பினர் இத்தேவையை திருப்திப்படுத்த தவருமிடத்து மத்தியஸ்தர்கள் முறைப்பாட்டை நிராகரிக்க முடியும். இருந்தபோதும் அதனால் மத்தியஸ்த செயல்பாட்டுக்கு இடையூறு ஏற்படாது.

23. மத்தியஸ்தம் செய்பவர் பின்வரும் நிலைமைகளுக்குட்டபட்டதாக மத்தியஸ்த தீர்ப்பை அறிவிக்க முடியும் :

(அ) மத்தியஸ்த தீர்ப்பொன்றின்போது குறிப்பிட்ட முறைப்பாட்டுக்கான விடயத்தைப் பிரசுரித்த பத்திரிகையின் முறைப்பாட்டு விசாரணையின் போது நடுவத் தீர்ப்பை வழங்குபவரின் அதிகாரமானது பத்திரிகையின் ஆசிரியர் மற்றும்/ வெளியீட்டாளர் ஆகியோர் பதிலளிப்பதற்கான சந்தர்ப்பம் மற்றும்/அல்லது திருத்தம் மற்றும்/மன்னிப்புக் கேரல் ஆகிய தீர்ப்புக்களை வழங்குதல் அல்லது சொல்லப்பட்ட அடிப்படையில் வழங்கத்தக்க வேறும் நிவாரனத்தை வழங்கும் வகையில் மட்டுப்படுத்தப்பட்டதாக அமைய வேண்டும். மத்தியஸ்த தீர்ப்பின்போது நடுவத்தீர்ப்பை வழங்குபவர் குறிப்பட்ட பிரசுரத்தின் திகதி, பிரசுரமான பக்கம், அல்லது அச்சுப்பிரதி அல்லது இணையத்தளமாயின் விடயம் குறிக்கப்பட்டிருந்த இடம் என்பவற்றை குறிப்பிட வேண்டும்.

(ஆ) குறிப்பிட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணையின் போது மத்தியஸ்த தீர்ப்பை வழங்குபவர் குறித்த முறைப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட விடயத்தை நிரூபிப்பதற்காக முன்வைக்கப்பட்ட விடயங்களை மிகவும் அவதானமாகவும் கவனமாகவும் ஆராய்ந்த பின்னரே ஒரு தீர்ப்புக்கு வருவார்.

(இ) குறிப்பிட்ட விடயம் மத்தியஸ்த தீர்ப்புக்காக முரண்பாட்டுத் தீர்வுக்குழுவின் மத்தியஸ்த நடுவர்களிடம் முன்வைக்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு மாத (1) காலத்திற்குப் பிந்தாத காலப்பகுதிக்குள் மத்தியஸ்த தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.

(ஈ) தரப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க முரண்பாட்டின் ஒரு பகுதி அல்லது தனிப்பட்ட விடயமாக இருந்தால் அதற்கான தீர்ப்பும் தனியாகவே தீர்மாணிக்கப்பட வேண்டும் என்பதோடு : அதே நேரம்

அந்த தீர்ப்பை அல்லது மற்றைய தரப்பினர் நிராகரிப்பதாயின் குறிப்பிட்ட விடயம் விதிவிலக்கானதாக இருப்பின் மத்தியஸ்தரால் தனிப்பட்ட தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதோடு ஏனொனில் :

(உ) தரப்பினர் ஒரு பகுதி தீர்ப்பிற்க இணக்கம் தெரிவித்தாலும் மத்தியஸ்தர் அந்த இணக்கத்தின் அடிப்படையில் வெரொரு தீர்ப்பை வழங்க அல்லது முன்வைக்க முடியும்.

(ஊ) குறிப்பிட்ட விடயத்தில் தீர்ப்புக்கு வர முடிந்தால் முரண்பாட்டுத் தீர்வுக்குழவானத தரப்பினரின் வேண்டுகோளின்படி அந்த தீர்ப்பை குறிப்பிட்ட முரண்பாட்டுக்கான தீர்ப்பாக உறுதி செய்ய முடியும்.

(எ) பின்வரும் சந்தர்ப்பங்களில் திருத்தம், மாற்றும் அல்லது தீர்வின் மொழி பெயர்ப்பு முன்வைக்கப்பட்டால் எவ்வாறாயினும் தரப்பினருக்கு குறிப்பிட்ட விடயம் தொடர்பாக அவர்களது கருத்தை தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும்.

(i) வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பு தொடர்பில் வெளிப்படையயான தவறான கணிப்பீடு அல்லது பிழை நிகழ்ந்திருப்பின் அதனை மத்தியஸ்தர் திருத்தம் செய்ய முடியும்.

(ii) குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் தீர்மாணிக்கப்படாத விடயம் ஒன்று தொடர்பாக நடுவத் தீர்ப்பை வழங்குபவர் தரப்பினர் அது தொடர்பாக முப்பது (30) நாட்களுக்குள் கோரிக்கை விடுக்கும் போது குறித்த விடயம் தொடர்பாக தீர்மாணிக்க முடியும்.

(iii) தரப்பினர் கோரும் பட்சத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டு முப்பது (30) நாட்களுக்கள் நடுவத் தீர்ப்பை வழங்குபவர் குறித்த தீர்ப்பு தொடர்பாக எழுத்து மூலமான விளக்கமொன்றை வழங்க முடியும்.

24. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவினால் வழங்கப்படும் மத்தியஸ்த தீர்வானது 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க முரண்பாட்டுத் தீர்ப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் தீர்ப்புக்கு சமனானதாகும். 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க முரண்பாட்டுத் தீர்ப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மத்தியஸ்த தீர்ப்பு அத்தீர்ப்பு வழங்கப்பட்டு காலாவதியாகிய 14 நாட்களின் பின்னர் இருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் (1) உயர் நீதிமன்றத்தில் செல்லுபடியாகத் தக்கதாகும்.

25. மத்தியஸ்த தீர்ப்புக்கான கட்டணத்தையும் செலவினத்தையும் தீர்வுக்குழுவே தீர்மாணிக்கும் என்பதோடு அந்த கட்டணத்தை யார் எவ்வாறு செலுத்துவது ஏ்னபது தொடர்பாகவும் குழு விளக்கமளிக்கும்.

26. மத்தியஸ்த தீர்வு நடவடிக்கை பூர்த்தியடைந்தவுடன் நடுவத்தீர்ப்பாளர் தீர்ப்பின் பிரதியையும் விசாரணையின் பதிவுகளையும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு அணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பார்.

## F. பதிவுகளைப் பராமரித்தல்

**27.** பிரதம நிறைவேற்று அதிகாரி நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கக்கூடிய முறைப்பாடுகள் உட்பட எல்லா முறைப்பாடுகளினதும் தொடர்புகள் மற்றும் இணக்கம், மத்தியஸ்தம், நடுவத்தீர்ப்பு நடவடிக்கைகள் என்பவற்றின் முடிவுகளினதும் பதிவொன்றைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் முறைப்பாடுகள், நல்லிணக்க மற்றும் மத்தியஸ்த அடிப்படையிலும் தீர்வு காணப்பட்ட முறைப்பாடுகள், அதேபோன்று கோர்ப்பில் உள்ளவைகள் உள்ளடங்களாக அனைத்து தவல்களையும் உள்ளடக்கியதாக பொது மக்களுக்குக் கிடைக்கத்தக்க வகையில் வருடாந்த அறிக்கையைத் தயார்படுத்தல் வேண்டும்.

## G. அறிவித்தல்

**28**.இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு என்று முகவரியிட்டு பதிவுத்தபாலில் அல்லது சாதாரண தபாலிலாயினும் பெற்றுக் கொள்ளும் அனைத்து விடயங்களிலும் உடனடியாக அல்லது தாமதிக்காது தின குறிப்பு(திகதியுடன்) முத்திரையை பதிக்க வேண்டும்.

29. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பெற்றுக் கொள்ளும் முறைப்பாடுகள் தொடர்பாகவும் மத்தியஸ்த தீர்வுக்காக சமர்ப்பிக்கப்டும் முறைப்பாடுகள் தொடர்பாகவும் கருத்துத் தெரிவிக்க வல்ல அதிகாரியாக ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகரியே கருமமாற்றுவார் என்பதோடு அவர் தேவைப்படும்பட்சத்தில் முரண்பாட்டுத் தீர்வக்குழுவின் தலைவருடனும் கலந்தாலோசிப்பார். முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பாக எந்த விதமான தகவல்களையும் பிரதம நிறைவேற்று அதிகாரி பத்திரிகைகளுக்கோ அல்லது இலத்திரனியல் ஊடகங்களுக்கோ வழங்கும் உரிமையைப் பெற மாாட்டார் என்பதோடு, முரண்பாட்டுத் தீர்வுக்குழுவின் தலைவரின் அறிவுரை பெறாமல் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் தொடர்பாகவும் எந்தவிதமான தகவல்களையும் அல்லது விளக்கத்தையும் வெளியிட மாாட்டார்.

30. பிரதம நிறைவேற்று அதிகாரியால் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பற்றிய தகவல்கள் அல்லது முறைப்பாடுகள் தொடர்பாக அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட வேறும் விடயங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு அறிக்கைகள் விடுவதாயின் அல்லது பொதுமக்களுக்கான அறிவித்தல்களை விடுப்பதாயினும் சரியே பிரிவு 29 இன்படி கருமமாற்றுவதே பொருத்தமானதாகும்.

## H. ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்தல்

31. இந்த ஒழுங்குவிதிகள் வருடாந்தம் அல்லது தேவைப்படும் என்று கருதும் பட்சத்தில் பிரதம நிறைவேற்று அதிகாரி அது தொடாட்பாக கவனம் செலுத்தி அங்கீகாரத்தைப் பெறுவதற்காக முரண்பாட்டுத்தீர்வக்குழுவுக்கு சமர்ப்பிப்பார் ஆமல்படுத:தவது தொடர்பான அனுமதிக்காக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு அணைக்குழவின் பணிப்பாளர் சபைக்கு அனுமதிக்காக சமர்ப்பிப்பார்.